1554 OCTOBER 2011

தாள் 1 — சைவ சித்தாந்த வரலாறு

Time : Three hours Maximum : 100 marks

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(கட்டுரை வினா-விடை)

1. தமிழ் இலக்கியம் சிவ வழிபாட்டை தெற்றெனப் புலப்படுத்துமாற்றை விளக்கியுரைக்க.

2. வடமொழி உருத்திர வழிபாடு குறித்து கட்டுரைக்க.

3. தோத்திர இலக்கிய வரலாற்றைச் சுருக்கி உரைக்க.

4. சாத்திர நூல்களின் தனித்தன்மை என்ன?

5. சாத்திர நூல்களில் திருவுந்தியார்க்கு உரிய இடத்தைக் கூறி - விளக்கு.

6. சிவஞான போதத்தின் சிறப்புக்களைக் கூறு.

7. அருள்நந்தி சிவாசாரியாரின் சைவ சித்தாந்தக் கொள்கை சிவஞான சித்தியாரில் எங்ஙனம் வெளிப்படுகின்றது?

8. சந்தானக் குரவர் வரலாற்றில் உமாபதி சிவம் பெற்ற முக்கியத்துவத்தை விரித்துரைக்க.

9. குன்றக்குடி மடத்தின் சமயப்பணிகளும் சமுதாயப் பணிகளும் ஒன்றே – ஆய்ந்துரைக்க.

10. பத்தொன்பதாம் நூற்றாண்டு சைவச் சான்றோர்களின் பணியினை எடுத்துரை.

———————

**1555** **OCTOBER 2011**

தாள் 2 – பக்தி இலக்கியம்

---

Time : Three hours Maximum : 100 marks

கட்டுரை வடிவில் ஐந்தனுக்கு விடை தருக.

1. நாயன் மார்களின் முதலாவதாக வைத்துப் போற்றப்படும் திருஞான சம்பந்தர் கூறும் திருநீற்றின் மகிமைகள் என்னென்ன?

2. "நற்றுணை யாவது நமச்சி வாயவே" – விளக்குக.

3. "வண்தொண்டர் சுந்தர் வாழ்வு ஒரு விந்தையானது" – விளக்குக.

4. மாணிக்க வாசகப் பெருமானின் சிறப்புக்களைக் கூறுக.

5. "அறிவுறுத்தலில்" வெளிப்படும் ஆழ்ந்த ஆழ்ந்த கருத்துக்களைக் கூறு.

6. சிவஞானம் கைவரப்பெற்ற மணிவாசகர் சுட்டறிவினை அகற்ற வேண்டுவன யாவை?

7. உளத்துடன் உரையாடும் மணிவாசகரின் சுத்தி முயற்சிகள் என்ன என்ன?

8. நன்றி மறவாமல் ஈடாக எதைக் கொடுக்க மாணிக்கவாசகர் எண்ணுகின்றார்.

9. மாணிக்க வாசகரின் திருவெம்பாவைக் சுருத்தை தொகுத்துரைக்க.

10. திருமூலரின் வரலாற்றை எடுத்தியம்பு.

---

OCTOBER 2011

தாள் 3 — சாத்திர இலக்கியம் – திருவருட்பயன்

Time : Three hours

Maximum : 100 marks

எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக.

1. திருவருட் பயன் நூலின் அமைப்பை எடுத்துரைக்க.

2. உயிரவை நிலை உரைக்கும் செய்திகளை சுருங்கக்கூறு.

3. ஆணவம் செய்கின்ற காரியங்கள் என்னென்ன?

4. திருவருளை உணராத உயிரின் நிலை என்ன?

5. ஞானகுருவை உலகம் உணர்தற் சாத்தியமில்லை – விளக்குக.

6. கருவிகளை நீங்கித் திருவருளோடு இணைதல் எங்ஙனம்?

7. உயிர் விளக்கம் குறித்து வரைக.

8. சுத்தத்தின் ஐந்து நிலைகளை விளக்குக.

9. அருளுடம்பு குறித்தும் முத்தி பஞ்சாக்கரம் குறித்தும் விளக்குக.

10. அணைந்தோர் தன்மை பற்றி உமாபதி சிவம் அருளும் செய்திகள் என்ன?

 OCTOBER 2011

தாள் 4 — சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகள்

Time : Three hours Maximum : 100 marks

ஐந்தனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

1. சைவ சித்தாந்தம் கடவுளின் தன்மைகளை எவ்வாறு உணர்த்துகின்றது?

2. மூவகை உயிர்களைக் கூறு.

3. முக்தியில் ஆணவத்தின் நிலை என்ன?

4. 'இறைவன் பணித்த பணியே முயற்சி' என்பதை சிந்தாந்தக் கொள்கை வழிப் புலப்படுத்துக.

5. 'மாயை' குறித்து கட்டுரைக்க.

6. ஞானத்தைத் தரும் ஆசிரியர் யார்?

7. தன்னியல்பு, பொதுவியல்பு குறித்த சைவ சித்தாந்தக் கருத்தைப் புலப்படுத்துக.

8. உயிர் விளக்கம் குறித்து கட்டுரைக்க.

9. துரிய நிலை (அருள் நிலை), அதீத நிலை (நீட்டை) குறித்து வரைக.

10. தாயுமானவரின் அனுபவத்தை எடுத்துரைக்க.